P.W.1 திரு.சதீஸ்குமார்

சாட்சி மனுவின் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்குவிசாரணை :

1) நான் பொங்கலூரில் ரெடிமேட் துணி கடை வைத்து 7 வருடங்களாக நடத்தி வருகிறேன். எனக்கு வருட மொத்த வருமானம் ரூ.15 இலட்சம் ஆகும். இலாபம் உட்பட ஆகும். நான் வருமான வரி செலுத்தவில்லை. நான் பொங்கலூர் கிளை கரூர் வைசியா வங்கி, திருப்பூர் கார்பரேசன் வங்கி ஆகிய இரு வங்கியில் கணக்கு வைத்துள்ளேன். ஆடிட்டரை வைத்து கணக்கு வழக்கு பார்த்து வருகிறேனா என்றால் இல்லை. நான் LIC ஏஜெண்டாக வேலை பார்த்தால் அந்த கமிஷன் மட்டும் திருப்பூர் கார்பரேசன் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும்.

2) கரூர் வைசியா வங்கியில் 2016 வருடத்திலிருந்து கணக்கு வைத்துள்ளேன். 2016 ஆம் வருடத்திலிருந்து வங்கி கணக்கை இந்த வழக்கில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எதிரிக்கு ரூ.13 இலட்சம் கொடுத்து இருப்பதாக சொல்லியிருப்பதில் ரூ.13 இலட்சம் எனக்கு எவ்வாறு வந்தது என்றால் மாதம் ரூ.50,000/- தொகை கட்டிட வாடகையாக எனக்கு கிடைக்கிறது. அதை வைத்து கொடுத்தேன். அந்த கட்டிடம் யார் பெயரில் உள்ளது என்றால் பொங்கலூரில் எனது பெயரில் உள்ளது. வருடத்திற்கு ரூ.6 இலட்சம் கட்டிட வாடகை வருவதற்கு வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. மேற்படி வாடகையை எனக்கு ரொக்கமாக கையில் செலுத்திவிடுவார்கள். வங்கி கணக்கில் செலுத்தமாட்டார்கள். எனது கடையில் சந்தோஷ், ராமராஜ், பாண்டியன், அம்பாள் பைனான்ஸ் அடகு கடை ஆகியோர் உள்ளனர். மேல் வீட்டில் மனோஸ்குமார் வாடகைக்கு இருந்து வருகிறார்.

3) மேற்படி 5 நபர்கள் எந்த வருடத்திலிருந்து வாடகைக்கு குடியிருந்து வருகிறார்கள் என்றால் அடிக்கடி வந்து செல்வதால் திட்டவட்டமாக சொல்லமுடியாது. இதே நீதிமன்றத்தில் இந்த வழக்கை தவிர 6 காசோலை மோசடி வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் 5 வழக்குகள் 2021 ஆம் வருடத்திலும், 1 வழக்கு 2023 ஆம் வருடத்திலும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இத்தனை

நபர்களுக்கு நான் பணம் கொடுத்ததற்கு Money Lender Act ன் கீழ் உரிமம் (License) பெற்றுள்ளேனா என்றால் இல்லை. மொத்தமாக நான் ரூ.30 இலட்சம் வரை மற்றவர்களுக்கு கடன் கொடுத்துள்ளேன். எதிரிகள் ஆர்.ஆர்.மணி, ஆர்.ஆர்.பாபு ஆகியோர்கள் ராக்கியாபாளையத்தில் குடியிருந்து வருகிறார்கள். ஆர்.ஆர்.மணி ராதா கிருஷ்ணன் வீதியில் குடியிருந்து வருகிறார். ஆர்.ஆர்.பாபு அம்மாபாளையத்தில் ராமகிருஷ்ணா பள்ளி அருகில் குடியிருந்து வருகிறார். அவர் குடியிருக்கும் வீதியின் பெயர் எனக்கு தெரியாது. எதிரிகள் இருவரின் வீட்டின் கதவு எண் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

4) ஆர்.ஆர்.மணி வீட்டில் அவரும், அவரது மனைவி, அவரது இரண்டு குழந்தைகள் உள்ளார்கள். ஒரு மகன் படித்து முடித்துவிட்டதாகவும், ஒரு மகன் கல்லூரியில் படித்து கொண்டிருப்பதாகவும் கூறியுள்ளார். அவர்கள் என்ன படிப்பு படித்தார்கள் என்பதை என்னால் குறிப்பிட்டு கூற இயலாது. அவரது மகன்களின் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. ஆர்.ஆர்.மணியை கடைசியாக 07.10.2022 ஆம் தேதி என்னுடைய வீட்டில் வைத்து பார்த்தேன்.

5) ஆர்.ஆர்.பாபு வீட்டில் அவரும், அவரது மனைவி, அவரது மகள் உள்ளார்கள். அவரது மனைவி, மகள் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. ரூ.13 இலட்ச தொகையை 23.08.2022 ஆம் தேதி எனது வீட்டில் வைத்து மதியம் 12.00 முதல் 12.30 மணிக்குள் எதிரிகள் இருவரிடமும் கொடுத்தேன். உண்மையில் நான் சொல்வது தவறு என்றாலும், அந்த சமயத்தில் ஆர்.ஆர்.பாபு தனியார் நிறுவனத்தில் பணி செய்து கொண்டிருந்தார் என்றாலும், அதை தெரியாமல் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு காசோலையை 06.10.2022 ஆம் தேதி ஆர்.ஆர்.மணி என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் வேறு ஒரு மூன்றாம் நபருக்கு பிணாமியாக இருந்து வழக்கு தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

6) ம.சா.ஆ.1 ல் உள்ள கையொப்பமும், காசோலையில் உள்ள கையொப்பமும் ஆர்.ஆர்.மணியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 இரசீதில் 2 வதாக சாட்சி கையொப்பம் செய்த நாராயணசாமி எனது நண்பர் ஆவார். 1 வது சாட்சி ரவிச்சந்திரனை ஆர்.ஆர்.மணியும், ஆர்.ஆர்.பாபுவும் அழைத்து வந்தார்கள். 1 வது சாட்சி ரவிச்சந்திரனை ஆர்.ஆர்.மணியும், ஆர்.ஆர்.பாபுவும் அழைத்து வந்ததாக பொய்யாக

சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், உண்மையில் ஆர்.ஆர்.பாபு அன்றைய தினம் அவரது நிறுவனத்தில் பணியில் இருந்தார் என்றால் சரியல்ல. இரசீது ஆவணத்தில் உள்ள சீலானது எதிரிகள் எந்த சமயத்திலும் பயன்படுத்தியதில்லை என்றாலும், அதனை போலியாக தயார் செய்து ம.சா.ஆ.1 ஆவணத்தில் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளின் நிறுவனமானது 2019 ஆம் ஆண்டிலேயே நஷ்டம் ஏற்பட்டு மூடப்பட்டுவிட்டது என்றாலும், அதன்பின்பு அந்த நிறுவனத்திற்கு தொடர்புடைய வியாபார நடவடிக்கைகள் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. 2019 ஆம் ஆண்டிலேயே நிறுவனம் மூடப்பட்டதால் ராமராஜ் நிறுவனத்தில் கோகிலா Brand ல் Production Manager ஆக தற்போதுவரை ஆர்.ஆர்.பாபு பணி செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 2019 ஆம் ஆண்டில் எதிரி நிறுவனம் மூடப்பட்டபோது நிறுவனத்தின் Letter Head மற்றும் காசோலைகளை கையாடல் செய்து என் மூலமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

7) வழக்கு காசோலையை வங்கியில் பணமாக்க தாக்கல் செய்தபோது கையொப்பம் வேறு வடிவமாக உள்ளது என்ற காரணத்தினால் திருப்பப்பட்டது என்றால் சரிதான். காசோலையில் நானே கையொப்பம் செய்து நானே பூர்த்தி செய்து மோசடி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இரசீது ஆவணத்தில் சாட்சியாக கையொப்பம் செய்த ரவிச்சந்திரன் எனது நண்பர் என்றாலும், தற்போது வழக்கிற்காக அவரை எதிரிகள் அழைத்துவந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 இரசீது ஆவணத்தை எதிரிகள் நிறுவனம் எந்த காலத்திலும் ஏற்படுத்தி கொடுக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக தயார் செய்தேன் என்றாலும் சரியல்ல. நான் செய்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிரிகள் பதில் அறிவிப்பு செய்தார்கள் என்றால் சரிதான். தாமதமாக அனுப்பினார்கள். அவர்களுடைய பதில் அறிவிப்பிற்கு நான் மறுப்பு தெரிவித்து பதில் அறிவிப்பு செய்தேனா என்றால் இல்லை.

8) நான் மோசடியாக செய்த அறிவிப்பில் மாரடைப்பு ஏற்பட்டு ஆர்.ஆர்.மணி இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. போன் மூலமாக எதிரிகளிடம் பணத்தை கேட்டேன். எதிரிகளின் போன் நம்பர் எனக்கு தெரியும். எனது செல்போனில் பதிவு செய்துள்ளேன். மனப்பாடமாக தெரியாது. சுமார் எத்தனை முறை போனில் தொடர்பு கொண்டு கேட்டு இருப்பேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் போன் செய்து பணம் கேட்டதற்கு எனது

செல்போன் நிறுவனத்திடமிருந்து அறிக்கை பெற்று தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் இரண்டு செல்போன் நம்பர் உள்ளது. அதை இந்த வழக்கில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எதிரிகளின் போன் நம்பர், முகவரி போன்ற விபரங்கள் எனக்கு தெரியாது என்றாலும், வழக்கிற்காக தெரியும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் நான் கடன் கொடுத்து இருந்தால் கடன் பத்திரமோ, புரோ நோட்டோ வாங்கி இருப்பேன் என்றால் சரியல்ல, நான் நம்பிக்கையின் பேரில் கொடுத்தேன். எதிரிகளுக்கு என்னை யார் என்று தெரியாது என்றாலும், நீதிமன்றத்தில் தான் முதல்முறையாக எதிரி பார்த்துள்ளார் என்றாலும் சரியல்ல. நான் மோசடியாக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு பணம் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதி வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஓம்/–க.சித்ரா,
நீதித்துறை நடுவர்,
பல்லடம்.